1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18-ம் தேதி அன்று நடந்த கூட்டத்தில், ஊர்வலம் வரலாற்றில் இடம்பெறக்கூடிய நிகழ்ச்சியாக இருத்தல் வேண்டும் என்று அறிஞர் அண்ணுவின் ஆசையை நிறைவேற்றி அவர் கனவை நனவாக்கிய ஊர்வலக்குழுவினரையும், கலை இயக்குநர்களையும் ஏற்றவாறு போற்றிப்புகழ ஒரு கம்பனே சயங்கொண்டானே இன்றைக்கு இல்லையே என்று தமிழ் இலக்கியத்தில் திளைக்கின்ற நான் வருந்துகின்றேன்.

ஊர்வலக் காட்சிக்கேற்ற இலக்கியப் பகுதிகளைத் தெரிந்தெடுப்பதில் ஊர்வலக் குழுவினரும் தமிழறிஞர்களும் கலை இயக்குநர்களும் எவ்வளவு நீண்ட விவாதத்தில் ஈடுபட்டனர் என்பதை நாள்தோறும் அவர்களோடு கலந்து உழைத்த எனக்கும் தனிஅலுவலர் வேங்கடசுப்பிரமணியத்திற்கும் தெரியும். தமிழிலக்கியத்தில் சுவைமிக்க பகுதிகளுக்குப் பஞ்சமே இல்லை. தமிழிலக்கியம் ஒரு கரும்புக்காடு. எந்தக் கரும்புதான் சுவையற்றதாக இருக்கும்? ஆயின், தெரிந்தெடுக்கும் பகுதி மனத்துக்கு மகிழ்ச்சியைத் தருவதாக இருப்பினும், கண்ணுக்கினிய காட்சியாகவும் அமைவதற்குப் பொருத்தமாக இருக்க வேண்டுமன்றோ? மேலும், அதனைக் காண்போர் அனைவரும்—தமிழ்ப்புலவரேயன்றி ஏனையோரும்—கண்ட மாத்திரத்திலேயே கருத்தை உணர்ந்து சுவைக்க வேண்டுமன்றோ? இவைமட்டுமன்றி, தமிழ்மொழி, தமிழன் வாழ்க்கைமுறை ஆகியவற்றின் தனி இயல்புகளைக் காட்டுகின்ற முறையில் ஊர்வலக்காட்சி அமைய வேண்டுமென்பது அண்ணாவின் ஆசை. இதற்கு இரண்டோர் எடுத்துக்காட்டுத் தருவது பொருத்தமாயிருக்கும். இந்தியத் துணைக் கண்டத்தின் மொழிகள் அனைத்திலுமே இராமாயண காவியத்தைப் புலவர்கள் எழுதியிருக்கின்றனர். ஆகவே, இராமாயண நிகழ்ச்சி ஒன்றினை ஊர்வலக் காட்சியாக அமைப்பதன் மூலம் தமிழன் வாழ்க்கை முறையின் தனி இயல்பு ஒன்றினைக்காட்ட முடியுமா? இவ்வினாவிற்குத் தமிழ்ப் புலவர்கள் "முடியும்" என்றே விடை தந்தனர். வில்லை வளைப்பதற்கு முன்னரே இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் கண்டு, கண்ட அக்கணமே காதல் கொண்டனர் என்னும் செய்தி வால்மீகி இராமாயணத்தில் இல்லை. தமிழிலக்கிய மரபையொட்டிக் கம்பன் "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்", அக்கணமே "இருவரும் மாறிப்புக்கிதயம் எய்தினர்" என்று கூறுகின்றான். எனவே, இக்காட்சி ஊர்வலத்தில் இடம் பெற்றது.

புலவர்கள் இல்லாத நாடும் இல்லை, புலவர்களைப் போற்றாத சமுதாயமும் இல்லை என்பது நாகரிக உலகம் முழுதுக்கும் பொருந்தும். எனினும், வாளால் வீசவேண்டிய புலவனுக்குச் சாமரம் வீசிய மன்னர் பெருமானையும், தன் ஆயுளைவிடத் தமிழ்ப்புலவருடைய ஆயுள் நீண்டதாயிருந்தால் நாட்டுக்கு நன்மை ஏற்படும் என்று அருநெல்லிக்கனியை அவ்வைக்கு ஈந்த அதியமானையும், தமிழ் மண்ணிலன்றி வேறெங்கும் யாரும் கண்டதில்லை. எனவே, அக்காட்சிகள் ஊர்வலத்தில் இடம் பெற்றன. இவ்வாறே ஒவ்வொரு காட்சியையும் அமைப்பதற்கு ஊர்வலக் குழுவினர் எடுத்துக்கொண்ட முயற்சியை எண்ணும்போதெல்லாம் என் இதயம் வியப்பினால் நிறைந்து விம்முகின்றது.

அலங்கார வண்டி ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு டிரான்சிஸ்டர் நாடாப்பதிவுப் பெட்டியை வைத்து வண்டியில் உள்ள காட்சியை விளக்க வேண்டுமென்பது முதலிலேயே செய்த தீர்மானம். ஆனால் அதற்கேற்ற வசனங்களை எழுதுவது பல காரணங்களால் தடைப்பட்டு நின்றது. பல வேலைகளுக்கு இடையிலும் இதை மறக்காத மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள் டிசம்பர்—28-ம் தேதியன்று இரவு "ஏன் அவற்றை எழுதவில்லை?" என்று வினவினார்கள். எனவே இருபத்தொன்பதாம் தேதி இரவு 10 மணியிலிருந்து 1 மணி வரையில் நானும் புத்தனேரி ரா. சுப்பிரமணியமும் சேர்ந்து பன்னிரண்டு வசனங்களைக் கலைஞருடைய அழகுத் தமிழ் நடையை இயன்றவரையில் பின்பற்றி எழுதி முடித்தோம். மறுநாட் காலை ஏழுமணியிலிருந்து ஒன்பது மணி வரையில் நானே முயன்று ஏனைய எட்டு வசனங்களையும் எழுதி முடித்தேன். அதேநாள் முற்பகல் 11 மணிக்கு வசனங்கள் இருபதையும் ஜெமினி ஸ்டுடியோவிற்கு எடுத்துச் சென்று நானே கொடுத்துவிட்டு வந்தேன். அவற்றைப் பதிவு செய்யும் வேலையைத் திரு வாசன் அப்பொழுதே தொடங்கினார். அன்று பகலும் இரவும் அவர் வேலை செய்தார். மறுநாட் காலை நான்கு மணிக்குத்தான் அவர் உறங்கச் சென்றார். 31-ஆம் தேதி இரவு $12\frac{1}{2}$ மணிக்கு, ஒரு வசனத்தில் ஒரு வரியை அறிஞர் பலர் விரும்பார் என்பதை நான் உணர்ந்தேன். மறுநாட் காலையில், திரு வாசன் அவர்களிடம் சொல்லி, அதனை அழித்துவிட்டு மறுபடியும் பதிவுசெய்யுமாறு நான் விடுத்த வேண்டுகோளை ஏற்று, மீண்டும் 500 ரூபாய் செலவு செய்து அதனை அவர் மாற்றியுதவினார். இந்த எடுத்துக்காட்டின் மூலம் ஊர்வலத்தை உருவாக்குவதில் எத்தனைபேர் எத்தகைய பெரு முயற்சியினை எடுத்துக் கொண்டனர் என்பது விளங்கும்.

தமிழ்ப்பற்றும், கலைப்பற்றும்

அக்டோபர் 24-ஆம் தேதியிலிருந்து ஊர்வல வேலையை மேற்கொண்டு இரவு பகலாக உழைத்த திரு கிருஷ்ணாஜீயை என்னால் மறக்கவே முடியாது.

சனவரி 12-ம் தேதியன்று திரு வாசன் அவர்களைக் கண்டு, "இந்த ஊர்வலத்தை நடத்துவதில் தங்களுக்குத் தூண்டுதலாக இருந்தது யாது" என்று வினவினேன். "தமிழ்ப்பற்றும் கலைப்பற்றுமே என்னை ஊக்கின. என்னுடன் எல்லா வகையிலும் ஒத்துழைத்த திரைப் படத் தயாரிப்பாளர்களும் கலை இயக்குநர்களும் கலைஞர்களும் ஆற்றிய தொண்டினை என் வாழ்நாள் முழுதும் நான் நினைந்து வியந்து பாராட்டிக்கொண்டே இருப்பேன்" என்று அவர் கூறினார்.



ஊர்வலக் காட்சிகள்



கடந்த சனவரி மாதம் சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளில் மிகச் சிறந்த அங்கமாக அமைந்தது ஊர்வலக் காட்சியாகும். இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் சாகிர் உசேன் அவர்களையும், ஏனைய வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும், பொதுமக்களையும் பெரிதும் கவர்ந்த இவ்வூர்வலக் காட்சிகளுக்குக் கருப்பொருளாக அமைந்தது நமது தமிழிலக்கியத்தில் கூறப்பட்டிருக்கும் பண்டைக்கால நிகழ்ச்சிகளாகும். ஊர்வலத்தில் இடம் பெற்ற இலக்கியக் காட்சிகளைப் பற்றிய குறிப்புகளைத் தொகுத்துக் கீழே கொடுத்திருக்கிறோம்.

உலகத் தமிழ் மாநாட்டிற்கு அணி செய்யும் சிறப்பு அங்கமான ஊர்வலம் 1968 சனவரி 3-ம் தேதி பிற்பகல் பூம்புகார் நகரான தீவுத் திடலிலிருந்து துவங்கியது.

இதனைக் காணும் பேறு பெற்றோர்—கண் படைத்த பயன் பெற்றோர்—எனவும் இந்த பவனியின் பெருமையை கண்டவர்—அப்பெருமையை கூறும் திறன் இழந்தார் எனக் கூறத்தக்க அளவிலும், வகையிலும் ஒப்புவமை கூற இயலாத இலக்கியக் காட்சிகள் கண் முன்னே நடமாட—காண வந்திருந்த தமிழர் கூட்டத்தின் தோள்களெல்லாம் மலையெனப் பூரித்து நிற்க—மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோட மறத்தமிழர் தலை நகரில் சங்க காலத் தமிழகத்தைக் கண்முன் கொணர்ந்து காட்டும் ஊர்வலம் துவங்கியது.

தீவுத் திடலில் பவனி துவங்குவதற்கு முன்பிருந்தே பல்லாயிரக் கணக்கில் மக்கள் அணி அணியாக ஊர்வலப் பாதை முழுவதும் திரண்டு நின்றிருந்தனர்.

தலைநகரம் முழுதும் விழாக்கோலம் பூண்டிருந்தது. ஆடவர் கூட்டத்துக்கு இணையாக மாதர்களும் ஊர்வலக் காட்சியினையும் மாட்சியினையும் காண வந்திருந்தனர்.

யானைவரும் முன்னே

ஊர்வலத்தின் முன்னால் நான்கு யானைகள் பள பள வென மின்னும் முகபடாம் அணிந்து கம்பீர நடைபோட்டு வந்தன.

தமிழகத்துக்குச் சிறப்புத்தரும் இசைக்கலையில் தனிச் சிறப்புப் பெற்று இன்றுவரை வேறுயாரும் "காப்பி" யடிக்க முடியாத கலையாக விளங்கிவரும் நாதசுர இசையை பழனி நாதசுரப் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் இசைத்து வந்தனர்.

தமிழன்னை

அடுத்து தமிழன்னை பவனி. அவள் பெற்ற இலக்கியச் செல்வங்களான காவியங்களும், காப்பியங்களும் மதலைகளாகச் சித்தரிக்கப்பட்டு—தமிழன்னையின் காலடியில் தவழ்கின்ற காட்சி அமையப் பெற்ற அலங்கார வண்டி வந்தது.

வள்ளுவன் கண்ட தமிழகம்

அடுத்த அலங்கார வண்டியில் வள்ளுவன் கண்ட தமிழகம் சித்தரிக்கப் பெற்ற காட்சி.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்", என்பதை வருணிக்கும் காட்சி உழவுத் தொழில் உலகுக்கு அச்சாணி என்று அக்காலத் தமிழர் போற்றிய வெற்றியை விளக்கிற்று. வள்ளுவப் பெருந்தகைக்கு உழவர் வணக்கம் செலுத்திய காட்சியைக் கண்ட மக்களின் உள்ளமெல்லாம் பூரித்தது.

கண்ணகி

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரக் காப்பியத்தின் நாயகி—கற்புக்கும் பெண்ணினத்தின் மாண்புக்கும் இலக்கணமாக உலகம் உள்ளளவும் போற்றத்தகும் தலைவி—ஒரு சிலம்பால் உயிர்க் கொழுநன் உயிர் கொன்றோர் தமைமை—மற்றொரு சிலம்பால் உயிர் கொன்று உலவிவரும் தெய்வம்—பாண்டியனின் அரசவையில் நீதி கேட்ட காட்சியைக் கண் முன் கொணரும் அலங்கார வண்டி வந்தது.

தமிழ் மண்ணில் பிறந்த கலை—தமிழ் மண்ணுக்கேயுரிய கலை—ஆடற்கலை. அத்தகைய நாட்டியக் கலையை சிறப்புமிக்க கலைஞர்கள் வழங்கினர். ஆடற் கலைக்கழகு தேடப் பிறந்தவர்—ஆடாத பொற் பாவையர் ஆடிவரும் அலங்கார வண்டியினைக் கண்டவர் உள்ளமெல்லாம் மகிழ்ச்சியால் ஆடியது.

கம்பநாடன் வடித்த காவியத்தில் ஒரு காட்சி அடுத்த அலங்கார வண்டிக்குரிய காட்சியாக அமைந்தது.

அதியமான்

தகடூரைத் தலைநகராகக் கொண்டு, தமிழையே மூச்சாகக் கொண்டு, வாரிவழங்கும் வள்ளல் தன்மையினையே வாழ்வின் அறமாகக் கொண்டு வாழ்ந்தவன் கோமான் அதியமான்.



யானை

தமிழ்த்தாயும் செல்வங்களும்

குடியரசுத்தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் ஊர்வலததைப் பார்வையிடும் காட்சி



திருவள்ளுவர் கண்ட தமிழகம்

ஔவையார் அதியமான்

முல்லைக்குத் தேர் ஈந்த பாரி

சென்னையில் 3-1-68 முதல் 10-1-68 வரை நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி 3-1-68ல் தமிழர் பண்பாட்டை விளக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலக் காட்சிகளில் சிலவற்றை இங்கே காணலாம்.

ஊர்வலத்தில் மாணவர்கள்



மாமல்லபுரம்

யானைகட்டிப் போரடித்தல்



கோட்டைப் போர்

முரசுகட்டிலில் மோசிகீர

பாரதி பாரதிதாசன்

உலகத் தமிழ் மாநாட்டுக் கொடி

ஊர்வலங்கண்ட மக்கள் திரள்

ஊர்வலத்தில் மகவ

இளமை நீடிக்கச் செய்யும் நெல்லிக்கனி ஒன்றைத் தானுண்ண விரும்பாமல் தமிழ்வாழ வேண்டுமெனில் தமிழ்ப் புலவர் வாழ வேண்டுமென்ற ஆர்வத்தால் உந்தப்பட்டு அச்சனியை அவ்வை மூதாட்டிக்கு வழங்கிய அரியதோர் காட்சி சித்தரிக்கப்பட்ட வண்டி வந்தது.

முல்லைக்குத்தேர்

பறம்பு நாட்டின் மன்னன் வேள்பாரி படருவதற்கு கொழு கொம்பின்றித் தள்ளாடித் தவித்து நின்ற முல்லைக் கொடியைக் காண்கின்றான்; அக் கொடி படர்ந்திட தன் தேரையே வழங்குகிறான். முல்லைக்குத் தேரீந்த பாரியென்று வள்ளல்கள் வரிசையில் முதலிடம் பெறுகிறான்.

இந்தக் காட்சியை அழகுபட சித்தரிக்கும் அலங்கார வண்டி வந்தது. வெண்புரவியும், தேரும், பாரியும், அவன் கையில் தவழ்ந்த முல்லைக் கொடியும் கண்டோர் பழந்தமிழகத்துக் காட்சியினைக் கண்ணாரக் கண்டு பெருமகிழ்ச்சியுற்றனர்.

ஆவடி ராணுவக் காவல் பிரிவைச் சேர்ந்த குழு வினரின் கரக ஆட்ட நிகழ்ச்சி இடம்பெற்ற வண்டி அடுத்து வந்தது.

ஆராய்ச்சிமணி

நீதி வழுவாச் சோழ மன்னனின் மைந்தன் வீதி விடங்கன் தன் கன்றைக் கொன்றுவிட்டான் என்பதற் காக அரண்மனையிலுள்ள ஆராய்ச்சி மணியை அடித்துத் தாய்ப் பசு நீதி கேட்கும் காட்சி அடுத்தத் தேர்.

தலை தந்த குமணன்

நாடு விட்டுக் காடு வாழ்ந்த நிலையில் தன்னை நாடி வந்த புலவரிடம் என் தலைதனைப் பெற்று தம்பி கைக் கொடுத்து விலைதனைப் பெற்று வீடு சேரு மாறு குமண வள்ளல் கூறும் காட்சி கொண்ட வண்டி வந்தது. தமிழ்ப் புலவரின் தமிழறிவுக்குத் தனது தலையினையே அளிக்க முன் வந்த வள்ளன்மை கொடைக்கும், தமிழ்ப் பற்றுக்கும் இலக்கணமாக அமைந்து கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

மாமல்லபுரம்

குடவரைக் கோயில்கள் என்று புகழ் பெற்ற மாமல்லபுரத்துக் குகைக் கோயில்களைப் பல்லவ மன்னன் தனது தேவியுடன் நின்றவாறே இளவர சனுக்குக் காட்டும் காட்சிகொண்ட அலங்கார வண்டி அடுத்து வந்தது.

அடுத்த வண்டியில் மதுரைக் கலைஞர்களின் காவடி ஆட்ட நிகழ்ச்சி இடம் பெற்றிருந்தது.

நக்கீரன்

நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று முழங்கிய நக்கீரன் வடித்த திருமுருகாற்றுப் படையில் ஒரு காட்சி அடுத்த அலங்கார வண்டிக்கான கருப்பொருளாக அமைந்திருந்தது.

திருப்பாவை தந்த ஆண்டாளும் அதற்கடுத்த வண்டியில் இடம் பெற்றார்.

ஆனை கட்டி

அக்காலத் தமிழகத்தில் பொங்கிய வளத்தினைச் சித்தரிக்கும் வண்ணம் மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று சொல்லி ஆனைக்கட்டி போரடித்தகாட்சி கொண்ட வண்டி நிஜ யானைகளோ எனக் கண்டார் மயங்கும் வண்ணம் அமைக்கப் பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து உயரிய கலைஞர்களால் கிராமி யக்கலை நிகழ்ச்சிகள் நடத்தப் பட்ட நிலையில் அவர்களைத் தாங்கிய வண்டிகள் ஊர்ந்தன.

பண்டைத் தமிழகத்து வணிகம்

மனித இனம் தோன்றியது முதல் நாகரிகத்தை உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் தனது வாணிபத் தின் மூலம் பரப்பியவன் தமிழன் என்பதை சித்தரிக்கும் வண்டி அடுத்தது. புகாரில் படியால் அளந்து முத்துக்களை அளிக்க அதை பல நாட்டு வணிகர் பொன் கொண்டு வாங்கி கப்பலில் ஏற்றிச் செல்ல யவனர்கள் நிற்பதை எழிலோவியமாக சித்தரித்த வண்டி வந்தது.

மோசிகீரனார்

யாரும் தீண்டத் தகாத முரசு கட்டிலில் களைப்பு நீங்க துயில் கொள்கிறார் மோசி கீரனார் என்ற தமிழ்ப் புலவர். அதைக்கண்ட சேர மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறை சினம் கொள்ளாது புலவருக்கு சாமரம் வீசி நிற்கின்றான்.

தமிழ்ப் புலவருககுத் தமிழ் மன்னர் அளித்திட்ட ஏற்றத்தைச் சித்தரிக்கும் இக்காட்சி அடுத்த வண்டியில் இடம் பெற்றது.

கோட்டை போர்

பழங்காலத்தில் தமிழகத்தில் கோட்டை முற்றுகை எப்படி நடக்கும் என்பதை இக்காலத் தமிழ் மக்களுக்கு எடுத்து விளக்கும் அரிய காட்சி இடம்பெறும் வண்டி. அடுத்து வந்தது.

அடுத்த அலங்கார வண்டியில் கோலாட்டம், கும்மி, போன்ற நிகழ்ச்சிகள் நடத்திக் காட்டப்பட்டன.

அடுத்த வண்டியில் கவியரசர் பாரதி, பாவேந்தர் பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம் ஆகியோர் அமர்ந்துள்ள காட்சி கொண்ட வண்டியும் அதை அடுத்து கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி., விடுதலைக் கப்பலைப் பார்த்தவாறு நிற்கின்ற காட்சி அமைந்த வண்டியும் அதை அடுத்துத் தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையர், மறைமலையடிகள், திரு. வி. க., ஆகியோரின் உருவங்கள் அமைந்த வண்டியும், தமிழ் மொழியைத் தங்கள் உயிரைப்போல் நேசித்த கால்டுவெல், போப், வீரமாமுனிவர் ஆகிய மேல் நாட்டுத் தமிழறிஞர் உருவங்களைத் தாங்கிய வண்டியும் வந்தன.

பெங்களூர் சுந்தரமூர்த்தி குழுவினரின் புரவி ஆட்டம் மற்றொரு வண்டியில் நிகழ்ந்தது.

தமிழ்க்கொடி

இறுதியில் தங்க முலாம் பூசிய யானை அமைந்த வண்டியில் தங்கத் தமிழ்த்தரணிக்கே உரிய வில், புலி, கயல் சின்னங்கள் அமைந்த தமிழ்க்கொடி பறக்கும் வண்டி வந்தது.

இத்தகைய அழகுக் காட்சிகள் ஊர்வலத்தைக் கண்டவர் கண்ணையும்—கருத்தையும் கவர்ந்தன.

தமிழினம் அன்றும் இன்றும்

1968-ம் ஆண்டு சனவரி மாதம் 3-ம் தேதி முதல் 10-ம் தேதி வரை நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி பொதுமக்களும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள வாய்ப் பளிக்கும் வகையில் தீவுத்திடலில் பூம்புகார் நகர் அமைத்து அங்கு தினமும் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு முதலமைச்சரின் ஆலோசனைக்கிணங்க ஏற்பாடு செய்யப்பட்டது. லட்சக்கணக்கான மக்கள் இப் பூம்புகார் மாநாட்டில் கலந்து கொண்டு இன் புற்றனர், பயனடைந்தனர். மாநாட்டை முடித்து வைத்து உரையாற்றுகையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் ‘‘தமிழினமே! தமிழா! மயங்காதே! தயங்காதே! உள்ளத்தால் நாம் திண்ணியராகப்பெற்றால் உலகில் எண்ணியதெல்லாம் முடிப்போம்’’ என்று குறிப்பிட்டார்.

உள்ளமெல்லாம் தமிழ் நிறைந்திருக்கும் வேளை—ஊனும் உயிரும் தமிழோடு கலந்திருக்கும் வேளை—எதைப் பற்றிப் பேசினாலும் தமிழைப் பற்றியே பேசிடும் வேளை—எதையும் தமிழோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வேளை—இந்த வேளையில் நான் ஆற்றும் பேருரை—பேருக்குத் தான் உரையாக அமையுமேயல்லாது பேருரையாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

இங்கு பூம்புகாரில் 10 நாட்களாக நாம் கண்ட காட்சி—கேட்ட கருத்துக்கள்—உள்ளத்தில் பொங்கிய எழுச்சியைப் பார்த்த நாம்—நாளைய தினம் இதே உற்சாகத்தோடும்—உள்ள எழுச்சியோடும் இங்கு காணப் போகிறோமா என்றால் காணமுடியாது.

தமிழ் நாதம்

ஏதாவது ஒரு முறையில் இந்த மாநாடு தொடர்ந்து நடக்காதா? பத்து நாள் நிலவிய தமிழ் நாதம் நிரந்தர நாதமாக இருக்காதா? — இந்த மாநாடு போல் எல்லா ஊர்களிலும் மாநாடு நடத்தக் கூடாதா? தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய எண்ணத்திலும் தமிழ் எழுச்சி எழச் செய்யக் கூடாதா? என்று அனைவரும் நினைக்கத்தகும் அளவில் பூம்புகார் மாநாடு அமைந்தது.

பூம்புகார் மாநாடு இவ்விதம் அமையும்; இவ்வளவு ஏற்றமுடன் அமையும் என்று நாங்கள் துவக்கத்தில் நினைக்கவில்லை...

மொழிக்காக ஒரு மாநாடு கூட்ட முடியும்; அதற்கு லட்சக் கணக்கில் மக்கள் வருவார்கள்; மணிக் கணக்காக—நாள் கணக்காக உட்கார்ந்திருப்பார்கள் என்று நாங்கள் அவ்வளவு அதிகமாக எதிர்பார்க்கவில்லை.

ஆனால் தமிழ் மொழிப்பற்று எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை மக்கள் காட்டிவிட்டார்கள்!

மக்களின் இந்த ஆர்வத்தைக் கண்ட வெளி நாட்டார், “எந்தத் தமிழைப் பற்றி ஆராய தமிழகம் சென்றோமோ—அந்தத் தமிழகத்திலுள்ள மக்கள்—எங்களுக்கு முன்பே நெடுங் காலம் தொட்டு ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியால் அகமகிழ்ந்து—அந்தத் தமிழ் மொழியை ஆவியினும் மேலாக நேசிக்கிறார்கள். தங்களுக்கு இன்பமளிக்கும் எல்லாச் சாதனங்களிலும் உயர்ந்ததாக நினைக்கிறார்கள். தமிழ் மொழியின் மாண்பை எண்ணி எண்ணி மகிழ்கிறார்கள். அந்தத் தமிழுக்கு எந்தப் பக்கமிருந்தும், எவரிடமிருந்தும், எந்த வகையான ஊறு வந்தாலும்—ஊறு வரும் என்று ஐயப்பட்டாலும் தமது இன்னுயிரைத் தந்தேனும் தமிழைக் காப்பாற்ற சித்தமாக இருக்கிறார்கள்” என்று தமது நாடுகளான ரஷ்யாவிலும், ஆஸ்திரேலியாவிலும்—அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், இலங்கையிலும், மலேசியாவிலும், இந்தோனேஷியாவிலும், மோரிஸ் தீவிலும், பிஜித் தீவிலும் பேச இருக்கிறார்கள். பேச வாய்ப்பும், உரிமையும் உள்ள இடத்திலெல்லாம் பேச இருக்கிறார்கள்.

இந்தப் பூம்புகார் மாநாட்டில் எந்த வகையில்—எந்த முறையில்—யார் பங்கு கொண்டிருந்தாலும்—வாழ் நாளிலேயே எண்ணி எண்ணிப் பெருமிதம் அடையும் நாளாக இந்த பத்து நாட்களும் அமையும்.

இந்த மாநாட்டில் பெரும் புலவர்களைக் கண்டீர்கள்: அவர் தம் கவியுள்ளங்களைக் கண்டீர்கள். தமிழையும்

HIGHLIGHTS OF POOMPUHAR MEETINGS

1. Thiru P. G. Karuthiruman, Leader of the Opposition party, delivering the inaugural address on 4-1-68.

2. Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Health, who presided over the Conference of Siddha Systems of Medicine, is addressing the gathering.



foreign delegate to the Second Tamil Conference is addressing at ting held on 7-1-68.

rumathi Sathiavani Muthu, Minister jan Welfare and Information, who ted at the Poompuhar meeting 68, is addressing the gathering.

ief Justice Thiru M. Anantha-n, releasing a book consisting ns composed by prisoners, to Madhavan, Minister for Co-opera-6-1-68.

6. Thiru C. N. Annadurai, Chief Minister of Tamil Nad, delivering valedictory address at Poompuhar Conference on 10-1-68.

7. A view of the gathering at the valedictory meeting.

8. Front view of the specially erected 'Pandal', where the meetings were held daily from 4-1-68 to 10-1-68 at Poompuhar.

தமிழ் நாட்டையும் பற்றி அவர்கள் பாடிய பாடல்களையும் —பேசிய பேச்சுக்களையும் கேட்டீர்கள்.

உரைவல்லார் பொருள் கூறியதையும், அவர்களது பொருளுரையில் ஓடிய கருத்துக்கும் காலத்துக்குமுள்ள தொடர்பு பற்றியும் கேட்டிருப்பீர்கள் !

ஒரு நாள் தாய்மார்களுக்கென்றே—மகளிர் நாள் என ஒதுக்கப்பட்டது. தாய்த் திருக்குலம் தமிழ் மொழி பற்றி ஆற்றிய உரைகளையும் கேட்டிருப்பீர்கள்.

சேரனும், சோழனும், பாண்டியனும்

இந்த மாநாட்டு மேடையில் சேரன் ஒரு நாள் நின்றிருப்பான் ; சோழன் இன்னொரு நாள் உலவி யிருப்பான் ; பாண்டியன் மற்றொரு நாள் தோன்றியிருப்பான்.

இளங்கோவடிகள் வந்திருப்பார். இலக்கண ஆய்வாளர்கள் வருகை புரிந்திருப்பார்கள் !

பூம்புகார் என்ற இந்தத் திருப்பெயரைக் கேட்ட போதே நம் நினைவு எங்கோ சென்றிருக்கும்.

அன்று எத்துணை சிறப்பாக வாழ்ந்தோம்—இப்போது எத்துணை இடர்ப்பாடுகளில் சிக்கித் தவிக்கிறோம் !

அன்று வளமாக வாழ்ந்தோம்; இன்று வறுமை பள்ளத்தில் வீழ்ந்திருக்கிறோம் !

அன்று உலகத்தார் பாராட்டிட வாழ்ந்தோம். இன்று நம்மிடம் உள்ளதைப் பறிக்க பிறர் வரும் நிலையுமுண்டு ; அதற்காகப் பயப்படாதீர்கள் என்று செட்டி நாட்டரசர் நமக்குக் கூறும் நிலையுனும் உள்ளோம்.

வானத்தில் பால் நிலவு காய்கின்ற வேளை—அந்த நிலவொளி பட்டதால் கவிதா உணர்ச்சி உள்ளத்தில் பொங்கி எழுகிறது ! யாப்புத் தெரியாவிடினும், இலக்கணம் புரியாவிடினும் பால் நிலவொளி மேனியில் பட்டு இன்பம் பெருக்கிய காரணத்தால்—அந்தப் பசுமை நினைவு மாறாத காரணத்தால் கவிதை உணர்ந்து நமது வாழ்வு விளக்காம் தமிழைப் பாடிட நினைக்கிறோம்.

அது முடிந்து இல்லத்தினுள்ளே செல்லும்போது இல்லத்தில் இருக்கும் ஒரே ஒரு விளக்கும் எண்ணெய் இல்லாத காரணத்தால் ஒளி குன்றி அணைந்திட இல்லத்தில் இருள் சூழ்ந்தால் உள்ளம் என்ன பாடுபடும் ?

வாழ்த்தவா ? வருந்தவா ?

வெளியிலே நிலவொளி ! உள்ளே இருள் ; வெளியே உணர்ச்சிப் பெருக்கு—உள்ளே மனம் உடைந்த நிலை ! தத்தளிப்பு ! தவிப்பு !

பத்து நாட்களும் தமிழ் பெருமக்கள் தந்த விளக்கம் கேட்டு வான் நிலவு ஒளியில் தோன்றிய பெருமித உணர்ச்சியை அடைகிறோம்.

நிகழ்காலம் பற்றி நினைக்கும் போது விளக்கணைந்த வீடுபோல் நம் உள்ளம் மாறுகிறது.

உன்னதத் தமிழைப் பெற்ற உங்களை வாழ்த்துவதா ? அத்தகைய தமிழ் இருந்தும் வாழ்வில் வளமடைய முடியாத நிலை குறித்து வருந்துவதா ? எனத் தெரியவில்லை.

ஐம்பெருங் காப்பியங்களும் காவியங்களும் படைத்த தமிழ் மொழியின் அருமை பெருமை நினைத்து மகிழ்வதா? தமிழ் மொழியை விட வேறு மொழி சிறந்தது எனக் கூறும் சிலரும், இருப்பது கண்டு வருந்துவதா ?—எனத் தெரியவில்லை.

தமிழ்ச் சமுதாயம் தமிழ் மொழியின் அடிப்படையில் தான் இயங்குகிறது. இதை உணர்ந்திருந்தாலும் எடுத்துச் சொல்ல முடியாமல்—எடுத்துச் சொல்லும் வகையறியாது நாம் இருக்கலாம் !

ஆனால் தமிழ் வாழ்ந்தால் தான் தமிழர் வாழ முடியும், தமிழர் வாழ்ந்தால் தான் தமிழ்ச் சமுதாயம் வாழ முடியும் என்று நாம் உள்ளூர உணர்ந்திருக்கிறோம்.

அதனால்தான் மொழிக்காக ஒரு மாநாடு என்றால் தமிழாசிரியர்கள் மட்டும்—புலவர்கள் மட்டும்—கற்றறிந்த கவிவாணர்கள் மட்டும் இந்த மாநாட்டுக்கு வரவில்லை. தமிழர் அனைவரும் வந்திருக்கிறார்கள் !

அவர்களே ஒரு கவிதையாக விளங்குகிறார்கள் ; அவர்கள் பேச்சிலே ஒரு பாட்டொலி ; அவர்கள் மூச்சிலே தமிழ் எழுச்சி ; அவர்கள் நடமாடும் போது வீரத் தமிழகமே நடமாடுவது போன்ற ஒரு உணர்வு இங்கே தோன்றுகிறது !

இங்கே ஆடவரும் வந்திருக்கிறார்கள் ; ஆரணங்குகளும் வந்திருக்கிறார்கள் ; இளைஞர்களும் முதியவர்களும் வந்திருக்கிறார்கள். தாய்மார்கள் தாங்கள் பெற்றெடுத்த வெற்றியான குழந்தைகளுடன் வந்திருக்கிறார்கள்.

குழந்தையும் தமிழ் இன்பமும்

தமிழின்பத்தைத் தாங்கள் செவி மடுப்பதோடு—தங்கள் குழந்தைகளுக்கு கருத்து விளங்கினாலும் விளங்காவிடினும் தமிழ் ஓசை இன்பம் அந்தக் குழந்தைகளின் செவி வழி புகுந்து ரத்தத்தோடு ரத்தமாய்—மழலையோடு மழலையாய் மாறட்டும் என்ற நினைப்பில் இடுப்பில் குழந்தைகளுடன் வந்திருக்கிறார்கள் தாய்மார்கள் !

அரும்பும் மலரும் பூத்திடும் பூங்காவை ஓவியமாகத் தீட்ட நினைக்கலாம் ஒரு ஓவியன். அதைக் கவிதையாக்கிடத் துணியலாம் கவி பாடக் கற்றவன். நான் ஓவியவனல்லன்—அதைக் கற்றுத் தேற்றவன். கவி பாடிட நினைப்பிருந்தும் நேரமில்லாதவன் எனினும் உள்ளத்தில் பதிந்ததை என்றும் மறவாமல் நினைவில் வைத்திருப்பவன். ஆகவே, இங்கு நான் கண்ட காட்சியை கண்கள் திறந்திருக்கிற நேரத்தில் மட்டுமல்ல ; கண்கள் மூடி இருக்கின்ற நேரத்திலும் மறக்க முடியாது.

பூம்புகார் என்ற நகரையும்—இந்த நகரில் அந்நாளில் அமைந்த கட்டிடம் போல் பழங்காலக் கோட்டையையும்—இங்கு ஒளிவிடும் ஒளி விளக்குகளையும்—அந்த ஒளி விளக்கையும் மிஞ்சும் வகையில் உங்கள் கண்களிலிருந்து ஒளிக் கிளம்பி அந்த ஒளி விரவி—பரவி நிற்கும் காட்சியும் என் மனதை விட்டு என்றும் நீங்காது !

இந்த உணர்ச்சி எனக்கு மட்டுமல்ல; உங்களுக்கும் இருக்கும்.







CULTURAL PROGRAMMES AT POOMPUHAR

1. A scene from the drama 'Thuravi (துறவி) staged by the Secretariat Staff on 4-1-68.

2. A scene from the dance drama Kannaki' (கண்ணகி) staged on 5-1-68.

3. A scene from the drama Thamizh Engal Uyir' (தமிழ் எங்கள் உயிர்) staged on 7-1-68.

4. A scene from the drama 'Socratis (சாக்ரடிஸ்) staged on 8-1-68.

5. A scene from the dance drama Kaveri Thantha Kalaichelvi' (காவிரி தந்த கலைச்செல்வி) staged on 8-1-68.

6. A dance performance staged on 6-1-68.

7. A scene from the drama 'Kataha Mutharaiyan' (காடக முத்தரையன்) staged on 9-1-68.

இந்த மாநாடு நடந்த பிறகும் பல மாநாடுகள் நடக்கலாம். ஆனால் அந்த பூம்புகார் மாநாடு போல் ஆகுமோ என்று நீங்கள் கேட்கப் போகிறீர்கள்.

உங்கள் ஊருக்கு ஒரு தமிழ்ப் புலவர் வருகிறார் என்று கூறினால் பூம்புகார் மாநாட்டில் பார்க்காத புலவரா ?—என நீங்கள் கேட்கப் போகிறீர்கள்.

அந்த அளவிற்குப் பூம்புகாருக்கும் உங்களுக்குமிடையே நெருங்கிய உறவை—நீக்க முடியாத பாசத்தை, தமிழ் எழுச்சியை, உணர்வை உண்டாக்கிக் கொண்டுவிட்டீர்கள்.

இன்றிரவு நான் சொல்வதற்காகவாவது கவிதை எழுதத் தொடங்குங்கள்! தமிழ் உணர்வு உள்ளத்தில் உள்ள காரணத்தால் கட்டாயம் கவிதை வரும் !

எல்லாம் கவிதை மயம்

அதை கவிதை அல்ல என்று கூறுவார்கள் புலவர்கள். ஆனால் நான் கவிதை அல்ல என்று கூறமாட்டேன். இலக்கணத்தை அடிப்படையாக வைத்து அதைக் கவிதை அல்ல என்று புலவர்கள் கூறலாம், நான்—உணர்ச்சியை வைத்து அதைக் கவிதை என்கிறேன்!

இன்னும் சொன்னால்—உங்கள் பார்வையே ஒரு கவிதை; உங்கள் பேச்சே ஒரு கவிதை ; உங்கள் கையொலியே ஒரு கவிதை ; உங்கள் வாழ்த்தொலியே ஒரு கவிதை; இங்கே எங்கும் நிறைந்திருக்கும் நாதமே ஒரு கவிதை !

இதைப்பற்றி எந்தக் கவிஞன் முழுதும் பாடிட முடியும்.

அன்றலர்ந்த மலரைத்தான் கவிஞன் பாடிட முடியும். பத்து நாட்களும் மலர்ந்திருக்கும் (மக்களின் முக) மலர்களைப்பற்றி எந்தக் கவிஞன் பாடிட முடியும் ?

ஒரு வெண்ணிலவைத்தான் கவிஞன் பாடிடமுடியும் : கறையேதுமில்லாத இந்த இலட்சக்கணக்கான வெண்ணிலவுகளை எந்தக் கவிஞன் பாடிட முடியும் ? நீங்களே கவிதையாகிவிட்ட பிறகு யார் உங்களைக் கவிதையில் வடிக்க முடியும் ?

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பேசும்போது அழகும்—உள்ள உணர்ச்சியும் உள்ளது கவிதை என்றார். அப்போது நீங்கள் கை தட்டினீர்கள் ! கைதட்டலுக்குப் பொருள் என்ன என்று சிந்தித்துப் பார்த்தேன். அழகும்—உள்ள உணர்ச்சியும் உள்ளவர் எம்.ஜி.ஆர். எனவே அவரே ஒரு கவிதை என்பதால் நீங்கள் கை தட்டினீர்கள் என்பதைக் கண்டேன் !

மீண்டும் அரசாள . . . .

கவிதையின் அளவு கோல் என்னைப் பொருத்தவரை உணர்ச்சிதான் ! அந்தக் கவிதையில் சந்தம் இல்லாது இருக்கலாம்; இலக்கணம் இல்லாது இருக்கலாம். இதை கூறுவதால் கவிதைக்கு இலக்கணம் கூடாது என நான் கூறவில்லை.

ஆனால் இலக்கணத்திற்கும் மேலாக—ஊடாக இணைந்தோடும் உணர்ச்சியும் அழகும் தூய்மையும் நல்ல திறமையும் கொண்டு செய்யப்படும் செயலும் அந்தச் செயலுக்குக் காரணமான சிந்தனையும் ஒரு கவிதையே !

முன்பு மாநிலம் ஆண்ட தமிழர் மீண்டும் அரசாளும் நாள் வருமா ? எனக்கேட்ட பாரதிதாசன், தமிழர் அரசு வரும் என்று தித்திப்பான சேதியைக் கூறினார்.

தமிழர்கள் தங்கள் அரசைப் பெற்றிருக்கிறார்களா ? —என்பது விரிவாக விவாதிக்க வேண்டிய விஷயம். ஆனால் ஒன்றை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். தமிழர்கள் தங்களை உணரத் தொடங்கிவிட்டார்கள். தமிழனின் பண்பு—யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பதல்ல ; யாரையும் தாழ்த்துவதும் அல்ல.

தமிழகம் உலகின் ஒரு பகுதியாக இருக்கலாம். ஆனால், அது யாருடைய வேட்டைக் காடாகவும் இருந்திட ஒரு நாளும் ஒருப்பட மாட்டோம்.

முன்பிருந்த மன்னர்கள்—அலைகடலை வென்றார்கள் ! நமது வணிகர்கள் நாவாய்களில் ஏறிக் கொண்டு மோரிஸ் தீவுக்கும், பிஜித் தீவிற்கும், மடகாஸ்கருக்கும் சென்று தமிழ் மணம் பரப்பினர் என்று இப்போது ஆராய்ச்சியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால், இந்தச் செய்தியை நமது பழம் பெரும் கதைகள் வெகு நாட்களுக்கு முன்பே கூறியிருக்கின்றன.

தாரணி மெச்ச வாழ்ந்தோம் ஒரு நாள் !

தாரணியிலிருந்து யார்—என்ன—கொடுப்பார்கள் என்று ஏங்குகிறோம் இன்று !

ஞாயிருகத் திகழ்ந்தோம் அன்று,

இருட் குகையில் சிக்கித் தவிக்கிறோம்—இன்று !

தயக்கம் நீங்கவேண்டும்

அதற்காக அந்த ஞாயிறு மறைந்துவிட்டது என்று பொருள் அல்ல ! நமது கண் கொஞ்சம் மங்கலாகி விட்டது, பழுதாகிவிட்டது என்றுகூடக் கூறமாட்டேன்.

மங்கலான கண்களைக் கொஞ்சம் துடைத்து விட்டுக் கொண்டு பார்த்தால் ஞாயிறு தெரியும் !

நாமும் எறிட்டுப் பார்த்து நெஞ்சு நிமிர்த்தி “ ஞாயிறு போற்றுதும் ; ஞாயிறு போற்றுதும் ” என்று இளங்கோ வடிகள் போல் பாடலாம் !

தமிழகம் இன்று தனது இயல்பான மாண்புகளை மறந்து துயில் கொள்கிறது என்றோ மயங்கிக் கிடக்கிறது என்றோ கூறமாட்டேன். தயக்கம் இருக்கிறது என்று தான் கூறுவேன்.

நம்மால் முடியுமா ?—என்ற தயக்கம் நமக்கு இருக்கிறது.

சேரன் வட நாட்டின் மீது படையெடுத்துச் சென்ற போது நம்மால் முடியுமா ?—என்று அவன் தயங்கவில்லை.

சோழன் நாவாய்களைச் செலுத்தி அலைகடலுக்கப்பாலுள்ள நாடுகளை வென்றபோது நம்மால் முடியுமா? என்று அவன் தயங்கவில்லை.

காட்டுப்புறத்தில் தினை பொறுக்கச் சென்ற கிராமத்துத் தமிழ்ச் சீமாட்டியொருத்திமீது புலி பாய்ந்து வந்த போது நம்மால் முடியுமா ? என்று அவள் நினைக்கவில்லை, கையில் கிடைத்த முறத்தால் அடித்து விரட்டினாள்.

காட்டுக்கரசன் ஆயிற்றே நாம் ! இவள் வீட்டுக்கரசி தானே ! என்று நினைத்துப் பாயவந்த அந்தப்புலி “வேலை

எடுக்காமல்—வாளை எடுக்காமல்—குப்பை கொட்டும் முறத்தால் தாக்க வருகிறளே ; இது தமிழ் நாடு அல்லவா ! இது தமிழச்சியின் ஆற்றல் திறம் அல்லவா?" என்று எண்ணி வெட்கத்தால் ஓடியிருக்கும்!—என்றே கருதுகிறேன்.

அன்று தமிழ்ப் பெண்கள் புலியை முறத்தால் அடித்துத் துரத்தினர் !

இன்றும் தமிழ்ப் பெண்கள் நமது பகையை முறத்தால் அடித்து விரட்டத் தயார் எனினும், அந்த முறம் கிடைத்தால் அதை எங்கு விலைக்கு விற்றுக் காசாக்கலாம் எனக் கருதுகிற பகைதான் நமது பகை !

முதலில், நமக்கிருக்கும் தயக்கத்தைப் போக்கும் மாநாடுதான் இந்தப் பூம்புகார் மாநாடு !

தயங்காதே தமிழா! என்று அடிப்படைப் பாடத்தைத் தருகிற மாநாடு இது!

அந்தப் பாடத்தோடு மயங்காதே தமிழா! என்ற பாடத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மயக்கம் ஏனென்றல் 10 நாட்களாக நாம் தமிழின் பெருமை கேட்டு அந்த மயக்கத்திலே இருக்கிறேம்!

ஆனல் இந்த மயக்கம் கெடுதல் செய்யாத மயக்கம். தமிழன் ஒருவன்தான் இவ்விதம் கெடுதல் தராத மயக்கத்தை—மொழி தரும் இன்பத்தை, மயக்கத்தைப் பெற்றவன். அந்த மயக்கத்திலிருந்தும் நாம் விடுபட்டாக வேண்டும்.

வேலை இருக்கிறது நிரம்ப

ஏனெனில், வேலை இருக்கிறது நிரம்ப ! வேலை இருக்கிறது ஒவ்வொருவருக்கும் ! வேலை இருக்கிறது ஒவ்வொரு நாளும் !

காடு திருத்திட வேண்டும் ! வளம் பெருக்கிட வேண்டும்! வேலையற்றோருக்கு ஒரு வேலை தந்து அவர்களை செய் தொழில் நேர்த்தி கொண்டவர்களாக மாற்றிட வேண்டும்! நிலத்தைத் தோண்டி கனிப்பொருட்களை எடுத்திட வேண்டும் ! சாதாரணப் பொருட்களை மட்டுமல்ல ! வரலாற்றுப் பொருட்களையும் தோண்டி எடுக்க வேண்டும் !

தூர்ந்து போன துறைமுகத்தை சீர்திருத்தி—அவற்றிலிருந்து தமிழ் நாவாய்களை—கப்பல்களை—செலுத்தியவாறு தமிழகத்து மாலுமிகள் தமிழ்க் கவிதைகளை இசைத்துக் கொண்டு செல்லவேண்டும்.

வானத்தில் பறக்கும் புள்ளினம்—வேறு பக்கம் பறந்து கொண்டிருப்பினும் இனிய கானத்தில் ஈர்க்கப்பட்டு கப்பல் இருக்கும் திசை நோக்கி வரும்.

கப்பல் மீது புள்ளினம் சிறகடித்துப் பறப்பது—கப்பலுக்கு வானக்குடை விரித்தது போல் அக்காட்சி அமைய வேண்டும்.

தமிழரின் இசையை அந்தப் புள்ளினம் கேட்டு அவை பாட—புள்ளினத்தின் பாட்டை இவர்கள் பாட வேண்டும்.

"பறவைகளாகிய எங்களுக்குத் தூய உள்ளம். ஆகவே நாங்களும் தமிழினம்தான், உயர உயரப் போகிறேம். இதுதான் தமிழன் மாண்பு. ஆகவே நாங்களும் தமிழினம்" என்று கூறிட வேண்டும், அந்தப் பறவைகள் !

இந்த நாளை எண்ணித்தான் பார்க்கிறேம். எண்ணியது நடக்கும் நாம் திண்ணியராகப் பெற்றல்—என்று வள்ளுவர் கூறுகிறர்.

வள்ளுவரின் வாய்மொழியை நாவலர் போல் மிடுக்காகக் கூறிட என்னல் முடியாது எனினும் பிழிந்தெடுத்ததை உங்கள் முன் தெளிக்கிறேன்.

உலகத்தில் நாம் எண்ணியது நடக்கும்—நாம் திண்ணியராகப் பெற்றல் !

திண்மை பெறுவோம்

தயங்காதே தமிழா ! மயங்காதே தமிழா! என்ற பாடங்களோடு தமிழர் திண்ணியராகவும் வேண்டும் ! அவ்விதம் திண்ணியரானல் உலகில் அவர் எடுக்கின்ற காரியங்கள் அனைத்தும் முடியும் என்ற நம்பிக்கையை—நாதம் நிறைந்த பாடத்தைப் பெற்றல் நம்மை உலகிற்கு அறிவிக்கும் நாளும் வரும் !

அந்த உறுதியைப் பெற பழம்பெரும் காப்பியங்களில் ஒன்றன சிலப்பதிகாரத்தின் தலைவி கண்ணகியைப் பார்த்தால் தெரியும் !

நீதி கேட்டு கண்ணீர் உகுத்தவாறு கையில் காற்சிலம்போடு அரசவை சென்று வாயிலோனை அழைத்து—அறிவு அறை போகிய அரசனே—என நெடுஞ்செழியப் பாண்டியனையே அறைகூவி அழைத்தாள் ! உள்ள உறுதி இருந்த காரணத்தால்.

இத்தனைக்கும் அவள் கணவனை இழந்த காரிகைதான்! ஆனல் கணவன் இறந்தான் என்றதும் அழுது புலம்பாமல் இன்னும் சிறிதுகாலம் பிழைத்திருக்கலாம் ; மறுவாழ்வு வாழலாம் என்று நினையாமல் நீதிக்குப் போராடிய சோழவள நாட்டின் பத்தினித் தெய்வம் அல்லவா கண்ணகி ?

கணவனை இழந்தபோதும் அவன் பெயருக்குமட்டும் மாசு சூழ்ந்திட விடமாட்டேன் என வஞ்சினம் பூண்டு அரசவை சென்று—அறிவு அறை போகிய மன்ன—என்று முரசறைந்தாளே—அந்த தமிழினத்தின் பத்தினித் தெய்வம் தரும் வீர உணர்ச்சி நாம் பெருத காரணம் என்ன ?

இதைத்தான் கடற்கரையில் கண்ணகியின் சிலை திறந்த காட்சியும் மாட்சியும் நமக்குப் போதிக்கிறது ?

சென்று வருக, வென்று வருக

கணவனை இழந்த ஒரு பெண்—அறிவைத் தவிர வேறென்றும் துணை இல்லாதவள்—மன்னனையே பார்த்து "அறிவு அறைபோகிய மன்ன!" என அழைக்கும் அந்நாள் உணர்ச்சியை—எழுச்சியை நாம் மீண்டும் பெறவேண்டும்.

நாம் உலகிற்குத் தர முடிந்தது இந்த அறிவுச் செல்வத்தைத்தான் ! அது தான் கொடுக்கக் குறையாத செல்வம் !

இந்தப் பத்து நாட்களாக கண்ட எழில்மிகு காட்சிகளையும், உலாவையும், விழாவையும், அதனல் ஏற்பட்ட அகப்பொலிவையும், முகப்பொலிவையும் ஊரெல்லாம்—நல்லோர்க்கெல்லாம் எடுத்துச் சொல்லுங்கள்.

எல்லோருக்கும் எடுத்துச் சொல்லுங்கள்—அதில் நல்லவர்கள் ஆனலும் ஆகலாம்.

இத்தகைய நற்செய்தியை எடுத்துச் செல்லும் திருத்தூதர்களாய் நீங்கள் சென்று வாருங்கள்—வென்று வாருங்கள்—தமிழகத்திற்கு வளம் சேர்த்துத் தாருங்கள்.



SARVODAYA DAY

1. Mass spinning and prayer near Gandhi statue at Marina on Martyrs' Day the 30th January 1968.

2. The Secretariat staff paid homage to the Father of Nation by observing two minutes silence at a special gathering at parade grounds at 11 a.m. on Martyrs' Day.



LANDMARKS IN THE HISTORY OF TAMILNAD

THIRU K.K. PILLAY,
University of Madras.

Who were the Tamils of old ? Where they the autochthons of South India ? Or, did they immigrate from outside ? These questions have been frequently asked; but decisive answers to them are yet difficult to be given.

That the South Indian Peninsula constitutes one of the earliest regions inhabited by man is a fact accepted by geologists and ethnologists. There is the possibility of a vast stretch of land having extended to the south and east of it. The so-called Lemurian continent might well have existed in the dim past. But it is doubtful whether at such an early age the fully developed man had begun to occupy that region. The theory advanced by Yuri Reshetov, the Russian geographer and anthropologist, in his recently published book, 'The Nature of the Earth and the Origin of Man' is well worth consideration in this context. He does not speak of the Lemurian continent as such, but thinks that the early people of the Indian sub-continent and Indo-China migrated through sea to regions like Australia and the Bahrein islands no less than 18,000—20,000 years ago. It is, however, too soon to build theories based on these postulates before they are indubitably proved.

Home of the Tamils

There is no doubt that in much later times, say, in the Neolithic age, South India could have become the home of the ancestors of the Tamils. But had they come from outside ? The urn-burials and the pottery discovered at the pre-historic burial site in Adichanallur on the banks of the maraparani deserve more systematic examination at the hands of archaeologists than it has received so far. Among the funeral furnishings on this site are found gold diadems and mouth-pieces along with household articles and utensils. The gold mouth-pieces are embossed with ornamental geometrical designs. Similar mouth-pieces have been found in tombs of Cyprus of the late Bronze age. In Gerar at Palestine, gold frontlets similar to the Adichanallur diadems have been discovered, which are assignable to about 1,200 B.C. More striking is the fact that among the tombs in Palestine a trident of iron has been found, similar to those at Adichanallur. Apparently, the worship of Murugan seems to have been in vogue in some regions of Western Asia. These remarkable discoveries suggest that either the Tamils might have emigrated from Western Asia into South India, or that batches of early Tamils might have gone thither, probably for purposes of trade and settled down there. Since Muruga worship has continued through the ages in South India and not in Palestine, the latter hypothesis seems more acceptable.

Invaluable treasure

But the Sumerian affinities with the so-called Indus Valley Culture seem to lend support to the view that a large-scale migration from Western Asia into India might have taken place in the 3rd millennium B.C. However, the suggestion of various possibilities does not amount to a categorical assertion one way or the other. More decisive evidence has to be awaited before final conclusions can be formulated.

There is the persistent view upheld by certain archaeologists and linguists that the original home of the entire Dravidian peoples was Western Asia, that they first came and occupied the Indus Valley and that they subsequently spread to several parts of India, including the extreme south. This hypothesis receives some support from the presence of certain Dravidian words in the Rig Veda. In this connection it must be noticed that a certain measure of resemblance between the relics of the Indus Valley Civilisation and those of the Early Tamils are traceable, although the conclusions of Fr. Heras regarding the similarity of the two scripts still await confirmation. On the other hand attempts have been made to ascribe the Harappan culture to an earlier wave of Aryan immigration. But there are fundamental differences between the two. In fact, speculations on the basis of inconclusive date cannot be scientific. We have to await the decipherment of the script of the Indus Valley inscriptions before a convincing answer to this difficult question can be provided.

A safe starting point is the invaluable treasure of Tamil literature belonging to the sangam age. It is now firmly established that the bulk of the surviving classics of the sangam belongs to the early centuries of the Christian Era. But a controversy regarding the number of the Academies remains unsettled. It is easy to dismiss the account provided by the commentary to the Irayinar Ahapporul as a figment of the author's imagination. But, on the other side, the persistent

tradition about the earlier Sangam works which are now lost, as well as the legends about the two deluges of the sea recorded in the Ceylonese chronicles suggest that the existence of two earlier Sangams is not a myth. For the attainment of high literary standard in the 1st century A.D. there should have been a development of the literature for some time prior to it. True, the fantastic periods of duration of the Sangams and the incredible legends associated with the Academies are mythical; but the fact of three academies having existed in the past does not deserve to be summarily dismissed as baseless.

Nor can it be held on the basis of early Brahmi inscriptions that the Tamil language was not well developed in the 2nd century B.C. as has been asserted by an historian. The epigraphs themselves are far too short to permit of any deduction regarding the linguistic attainment of the Tamils of that epoch. Some Tamil and Prakrit words are found jumbled together in these inscriptions which record the donation of caves to Buddhists and Jains from outside. Equally invalid is the contention of the same writer that the pre-Aryan Tamils possessed only a rather 'primitive and poorish culture'. The literary standard attained by the Tamils of the 1st century A.D. if not of an earlier period, runs counter to that view.

The Sangam age

It has to be observed that the advent of the Aryans into the extreme South did not take place much earlier than the 5th century B.C. The oldest Sangam poems show little trace of Sanskrit influence. It is only with the lapse of time that Sanskrit words and ideas penetrated into the warp of Tamil literature. By the time that some of Kilkanakku works appeared, the result of the inflow of Aryan language had increased.

A vivid picture of the civilisation of the Tamils during the early centuries of the Christian Era is gleaned from the Sangam classics. The particular word 'Sangam' was of later origin; it must have flourished under an earlier designation like 'Avai' or 'Kudal'. Politically, there were the three kingdoms of the Chera, Chola and Pandya, seven Vallals and other minor chieftains. The monarchies in particular must have attained a considerable stage of political development much earlier than the 1st century A.D. The Hathigumpha inscription of Kharavela, belonging to the 1st half of the 2nd century B.C. speaks of a league of Tamil States, which was 113 years old at the time of the inscription and had been a menace to the Kalinga kingdom for some time past. Obviously the Tamil kingdoms had attained a certain measure of strength and efficiency even before the 3rd century B.C.

The Kings and chieftains often engaged themselves in mutual warfare, but in respect of their duties they were actuated by certain well-recognised ideals and moral principles suited to the age. The concern for the welfare of the subjects weighed greatly with the monarchs. The advent of the Aryans exerted a considerable influence on the kings and their conduct, because the newcomers soon occupied an important position at the royal courts. On the whole, the Sangam age was conspicuous for social stability and literary progress. It was characterised by unconventional simplicity.

The intruders

About the 4th century A.D. there was a cataclysm in the Tamil country, and the glory of the Sangam age suffered a severe set-back. The Kalabhras, as these intruders have been called, spread distaster and ruin, and the Tamil kings seem to have failed in their resistance to them. The Velvikkudi inscription of the 9th century reveals how the wicked invaders had caused disorder in the country. Who these Kalabhras were, it is not known. It is generally believed that they were a fierce tribe belonging to some place in the north of Tirupati. They appear to have been converted to Buddhism prior to their advent into Tamilnad. A state of chaos prevailed until the end of 6th century A.D. when the Pandyan King, Kadumkon put an end to the Kalabhra rule and revived the Pandyan power.

Almost about the same time the Pallavas emerged as a strong power under the illustrious Mahendravarman I (580–630 A.D.). The origin of the Plallavas is another unsettled problem. But every thing considered, they seem to have been of a non-Tamil stock. In all probability they were successors of the Satavahanas and they hailed from the Andhra country. They contributed considerably to the development of Sanskrit literature. Besides, they beautified their capital Kanchi as well as Mahabalipuram with admirable works of art.

The Chola revival

The Chola revival under the Vijayalaya line constitutes the next important epoch, politically and culturally. An empire of considerable extent and strength was established by Raja Raja I and his equally famous son, Rajendra I. Not only did they succeed in acquiring a substantial empire in South India but undertook successful expeditions in North India and in South-East Asia. The surnames, 'Gangaikonda' and 'Kadaramkonda' are indicative of these facts. But the abiding contribution of the Cholas is the establishment of a harmonious culture built on the foundations of Tamil and Sanskrit bases. The temple became, more than ever before, the pivot of the religious, social and cultural progress.

Though the Chola power received a fresh increase of strength under Kulottunga I (1070–1118 A.D.) and his successors, it became enfeebled in the 13th century, and as a consequence of domestic disruption, it declined.

